# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள் மூலம் செப்டம்பர் மாதம் 21ஆம் இலவசமாக சுய தொழில் தொடங்க தையல் பயிற்சி, அப்பளம் ஊறுகாய் மற்றும் மசாலா பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, துரித உணவு தயாரித்தல், மூங்கில் கூடை தயாரித்தல் மற்றும் சணல் பை தயாரித்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

மேலும், கிராமப்புற பெண்கள் 18 வயது முதல் 45 வயது வரையில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள், மகளிர் திட்டத்தில் தங்கள் பகுதியில் உள்ள PLF ஐ சந்தித்து வறுமை கோட்டு எண் பெற்று தங்கள் மாவட்டத்தில் இயங்கி வரும் பாரத ஸ்டேட் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி வகுப்புக்கு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சிக்கு வரும் அனைவரும் இலவச தங்குமிடம் மற்றும் உணவு, காலை மாலை டீ வழங்கப்படும். பயிற்சி முடிந்த பிறகு அரசு சான்றிதழ் வழங்கப்படும். 10 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை மானியத்துடன் வங்கி கடன் வாங்கி தொழில் தொடங்க வழிகாட்டப்படும்.

தேவையான ஆவணங்கள் - ஆதார் நகல், குடும்ப அட்டை நகல், பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல், BPL வறுமை கோட்டு எண் அல்லது 100 நாள் வேலை அட்டை நகல் மற்றும் 4 பாஸ்போர்ட் சைஸ் போட்டோ

மேலும், விவரங்களுக்கு பாரத ஸ்டேட் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம், வட்டார போக்குவரத்து அலுவலகம் பின்புறம், கீழப்பழூர், அரியலூர் என்ற முகவரியையும், 9842337565 என்ற தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொள்ளலாம்.